# 03-05-2024 செய்தி

## ஞெகிழி மாசு: முழுமையாக தீர்வு எப்போது?

- ஞெகிழி ஒழிப்பை முதன்மை நோக்கமாகக் கொண்டு ஐநா சுற்றுச்சூழல் அவை (UNEA) 2022இல் தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து, ஞெகிழி மாசுபாடு குறித்த பன்னாட்டுப் பேச்சுவார்த்தைக் குழு (INCPP) உருவாக்கப்பட்டது.
- ஞெகிழி ஒழிப்பு சார்ந்து 2022 மார்ச் மாதம் தொடங்கி, பல சுற்றுகளாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவரும் நிலையில், 2024 இன் இறுதியில் தென் கொரியாவில் நடைபெறும் இறுதிச்சுற்றுப் பேச்சுவார்த்தையின் முடிவில், சர்வதேச உடன்படிக்கையில் 192 உறுப்பு நாடுகள் கையெழுத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ஒவ்வொரு நாளும் 2,000 குப்பை லாரிகள் அளவுக்கு ஞெகிழிக் கழிவுகள் பெருங்கடல்கள், ஆறுகள், ஏரிகள் என உலகின் நீர்நிலைகளில் கொட்டப்படுகின்றன. ஒவ்வொர் ஆண்டும் 1,9–2.3 கோடி டன் அளவுக்கு ஞெகிழிக் குப்பை நீர்நிலைகளில் கொட்டப்படுவதால், சூழலியல் சீர்கேடு தீவிரமடைந்துகொண்டே செல்கிறது.
- ஞெகிழி மாசுபாடு என்பது வாழிடத்தின் தன்மையைத் திரித்து இயற்கையின் போக்கை மாற்றிவிடக் கூடியது. அது காலநிலை மாற்றத்துக்குத் தகவமைத்துக்கொள்ளும் சூழலியல் மண்டலங்களின் தன்மையை அழிக்கிறது.
- கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம், உணவு உற்பத்தி முறை, சமூக நலம் எனப் பல்வேறு நிலைகளில் அது நேரடியான பாதிப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.
- ஐநாவின் சுற்றுச்சூழல் திட்டம், ஞெகிழி மாசுபாட்டினை ஒரு தனிப் பிரச்சினையாகப் பார்க்கவில்லை.
- உடல்நலப் பாதிப்புகள் காலநிலை மாற்றம், சூழலியல் தொகுப்பு சார்ந்த சீர்கேடு, குறைந்துவரும் இயற்கை வளம் ஆகியவற்றுடன் இணைத்துப் பார்க்க வேண்டிய பிரச்சினையாக அது அடையாளப்படுத்துகிறது.
- உலகின் முன்னணி ஞெகிழி மாசுபாட்டாளர்களில் ஒன்றாக இந்தியா உள்ளது. நாளொன்றில் சுமார் 26,000 டன் அளவுக்கு ஞெகிழிக் கழிவு இந்தியாவில் உருவாகிறது.
- ஞெகிழியைக் கட்டுப்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக, ஞெகிழிக் கழிவு மேம்பாட்டு (திருத்த) விதிகள் (2021)இன் அடிப்படையில், 19 வகையான 'ஒற்றைப் பயன்பாட்டு' ஞெகிழிகளை 2022இல் இந்திய அரசு தடைசெய்தது.
- உலக மக்கள், ஆண்டொன்றில் சராசரியாக 50,000 கோடி ஞெகிழிப் பைகளை உபயோகிக்கின்றனர். இதில் வெறும் 14% மட்டுமே மறுபயன்பாட்டுக்காகச் சேகரிக்கப்படுகின்றன.
- மற்றவை எரிக்கப்படுகின்றன அல்லது நிலத்தில் கொட்டப்படுகின்றன.
- மறுசுழற்சி செய்வதைவிடவும் ஞெகிழியைப் புதிதாக உற்பத்தி செய்வதே, நடைமுறையில் பெரிய நிறுவனங்களுக்கு லாபம் தரும்.
- இதனால் மறுசுழற்சிச் செயல்பாடுகள் பெரிய அளவில் தாக்கம் பெறாமல் போகின்றன.
- இந்தப் பின்னணியில்தான், ஞெகிழியை ஒழிக்கும் நடவடிக்கையை ஞெகிழி மாசுபாடு குறித்த பன்னாட்டுப் பேச்சுவார்த்தைக் குழு தீவிரப்படுத்தியிருக்கிறது.
- உலகளாவிய ஞெகிழி உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பதில் பேச்சுவார்த்தை மையம் கொண்டிருப்பதால், ஞெகிழி உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடுகள், கச்சா எண்ணெய்–இயற்கை எரிவாயு ஏற்றுமதியாளர்கள் ஆகியோர் இதைக் கடுமையாக எதிர்க்கின்றனர்.
- நாம் பயன்படுத்தும் ஞெகிழி (Synthetic plastic) புதைபடிவ எண்ணெய், நிலக்கரி உள்ளிட்டவற்றில் இருந்து தயாரிக்கப்படுகிறது என்பதே எதிர்ப்புக்குக் காரணம்.
- நுகர்வுத் தேவையைக் காட்டிலும் புதைபடிவ எரிபொருள் சார்ந்த எண்ணெய்ப் பொருளாதாரத்தோடு ஞெகிழி உற்பத்தி நெருங்கிய தொடர்புள்ளது.
- எனவே, நாம் பிரச்சினையின் வேர்களை நோக்கிச் செல்வதே அவசியம். அந்தவகையில், ஞெகிழி ஒழிப்புக்கான உடன்படிக்கையானது முழுமையான தீர்வை நோக்கியதாக உருவாக்கப்படுவது அவசியம்!